Our Quarterly Movie events have become a Good Meeting Point & provide ample Networking opportunity and Getting to know other Alumni & Family. This time we had a sizeable New Alumni from 2007 Batch & we are happy we are able to rope in New, beyond 2000 Batch Alumni.

During the Interval Break, we honored the Family Meet Committee Members for the successful conduct of Family Meet on 6th Sep 2026, led by Captain Anita & her enthusiastic Team.

We have screened 15 Movies so far, starting from Sep 2023 onwards & we want this to run continuously. Thanks to Mr Ramesh Prasad, Mr Sai Prasad, our CIT Alumni and the Management of Prasad Films to provide this to CITAACC.

Thanks

படைப்பாளி

படைத்தவனிடம் கேட்டேன்
உலகை ரசிக்க
உனக்கு மட்டும்
உரிமையா என்று..

குதூகலமான குழந்தை
மனதை
குத்தகைக்காவது

கொஞ்ச காலம் கொடு
என்றேன்..

அது எனக்கே
கிடைக்கவில்லை
வேண்டுமென்றால்
உன்னை கவிஞன்
ஆக்குகிறேன் என்றான்,
காதோரம்..

கனவு கலைந்தது..
படைப்பாளி ஆனாலும்
கரைந்து போகிறேன்..

கனவுகளில்..
கவிஞனாக.

NEW INDIA PREMIER MEDICLAIM POLICY.

SUM INSURED UP TO ₹ 1 CRORE*

*conditions apply

- Maternity/ Miscarrage
- Infertility Treatment
- Organ Transplant
- Ayush Treatment
- Hiv & Aids
- Sports Hazardous
- Obesity Treatment
- OPD Treatment
- Dental Treatment
- Critical Illness Benefit

For more details on risk factors, terms & conditions please read sales brochure carefully before concluding a sale. *Condition apply

Beware of Spurious Phone Calls and Fictitious / Fraudulent Offers : IRDAI Clarifies to public that : IRDAI or its officials do not involve in activities like sale of any kind of insurance or financial products nor invest premiums. IRDAI does not announce any bonus. Public receiving such phone calls are requested to lodge a police complaint along with details of phone call, number.

www.newindia.co.in

Toll free 1800-209-1415

NEW INDIA ASSURANCE

दि न्यू इन्डिया एश्योरन्स कंपनी लिमिटेड

The New India Assurance Co. Ltd

Regd & Head Office: New India Assurance Bldg., 87, M.G. Road, Fort, Mumbai-400 001, INDIA

IRDAI REGN. No. 190 CIN : U 99999 MH 1919 GOI 000 526 URN: IRDAI/HLT/NIA/P-H/V.I/46/2016-17 URN: NIA/CCD/16-17/001

நகைச்சுவை வேந்தர் கே.ஏ.தங்கவேலு

KNK Sundaram
1985 - Mech
&
Satheesh.S
1985 - Civil

நகைச்சுவை நடிகர் கே.ஏ.தங்கவேலு புதுச்சேரி மாநிலம் காரைக்காலில் அருணாசலம் – கருமாம்மாள் தம்பதிக்கு மூன்றாவது மகனாக 1917ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் தேதி பிறந்தார். அவருக்கு ஆறுவயது ஆனா போது தாய் கருமாம்மாள் காலமனாதால், தந்தை அருணாசலம் இரண்டாவது திருமணம் செய்து கொண்டு சிங்கப்பூர் சென்றுவிட, சித்தியிடம் வாழ பிடிக்காமல் திருமலைராயன் பட்டினம் கிராமத்தில் உள்ள உறவினர் வீட்டில் வளர்ந்தார், தங்கவேலு. அங்கும் அன்பும் மரியாதையும் கிடைக்காமல் தவித்தவர், நாடகங்கள் பார்த்து மனதை தேற்றினார். பிறகு நாடகத்தில் நடித்து தன் வாழ்க்கை பயணத்தை தொடர்வது என்று முடிவு செய்தவர், ஆரம்பத்தில் ராஜாம்பாள் நாடக கம்பெனியில் சேர்ந்தார்.

அங்கு சிறிய சிறிய வேடங்களில் நடித்து கவனிக்க வைத்தவர், அதன் பிறகு ‘யதார்த்தம்’ பொன்னுசாமி நாடகக் குழுவில் சேர்ந்து நகைச்சுவை வேடங்களில் நடித்து புகழ் பெற்றார்.

பத்து வயதில் நாடகங்களில் நடிக்க ஆரம்பித்த தங்கவேலு, எம்.ஜி.ஆர் அறிமுகமான ‘சதி லீலாவதி’ (1936) திரைப்படத்தில் தங்கவேலுவுக்கு ஒரு சின்ன பாத்திரம். அதே படத்தில் என்.எஸ்.கே, டி.எஸ் பாலையா போன்றோரும் நடித்தார்கள். “இன்னைக்கு உன்னை ஷூட் பண்ணப் போறோம்”னு இயக்குநர் தங்கவேலுவிடம் சொன்னதும் இவர் பதறிப் பயந்து என்.எஸ்.கே விடம் போய் “அண்ணே, என்னை சுடப் போறாங்களா?” என்று அழுதாராம். “பைத்தியக்காரா! ஒன்னைப் படம் பிடிக்கப் போறாங்கடா!” என்று என்.எஸ்.கே விளக்கம் சொன்னாராம். இந்தப் படத்தில் அவருடன் எம்.கே.ராதா, என்.எஸ்.கிருஷ்ணன் என பலரும் அறிமுகமாகி இருந்தனர்.

‘சதி லீலாவதி’ படத்திற்கு பிறகு படவாய்ப்பு எதுவும் தங்கவேலுவுக்கு கிடைக்கவில்லை. தங்கவேலுவும் என்.எஸ்.கிருஷ்ணனும் கந்தசாமி முதலியாரின் நாடகக் குழுவில் அண்ணன் தம்பியாகப் பழகியவர்கள்.

அதனால் என்.எஸ். கிருஷ்ணன் புதிதாகத் தொடங்கிய தனது நாடகக் குழுவில் தன்னை அழைத்த போது, மறுப்பேதும் சொல்லமால் அவருடன் சேர்ந்து கொண்டார். நாடகங்கள் நடத்திக் கொண்டே திரையுலகிலும் புகழ்பெற்று விளங்கிய என்.எஸ்.கிருஷ்ணன், 1951 ஆம் ஆண்டு மணமகள் என்கிற படத்தை தயாரித்து இயக்கிய போது அந்தப் படத்தில் பத்மினியின் உதவியாளராக தங்கவேலுவை நடிக்க வைத்தார்.

அந்தப் படம் நடந்து கொண்டிருக்கும் போதே டி.ஆர்.ரகுநாத் இயக்கிய ‘சிங்காரி’ என்ற படத்திலும் நடித்தார் தங்கவேலு. ‘சிங்காரி’ என்ற படத்தில் டணால்... டணால்... என்று அடிக்கடி வசனம் பேசியதால் தங்கவேலுவின் பெயருக்கு முன்னால் டணால் என்ற வார்த்தை ஒட்டிக்கொண்டது. ‘சிங்காரி’ படத்திற்குப் பிறகு பல திரைப்படங்களில் சிறு சிறு பாத்திரங்களில் நடித்த தங்கவேலுவுக்கு தமிழ்த் திரையுலகில் ஒரு நிலையான இடத்தைப் பெற்றுத் தந்த படம் ‘பணம்’. “என்னுடைய வாழ்க்கை கலைவாணர் எனக்கு போட்ட பிச்சை. ஆரம்பத்தில் ஒரு நல்ல வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்தது மட்டுமின்றிஞ் தொடர்ந்து என் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர் கலைவாணர்தான்” என்று பல பத்திரிகைப் பேட்டிகளில் குறிப்பிட்டுள்ளார் தங்கவேலு. அதன் பிறகு எம்.கே.தியாகராஜ பாகவதர், எம்.ஜி.ஆர், சிவாஜி, ஜெமினி, எஸ்.எஸ்.ராஜேந்திரன், ஜெய்சங்கர், ரவிச்சந்திரன் என்று தங்கவேலு இணைந்து நடிக்காத கதாநாயகர்களே இல்லை என்று சொல்லலாம்.

அவருடைய கால்ஷீட்டுக்காக சில கதாநாயகர்களின் படங்கள் காத்திருந்தது உண்டு. சென்னை அண்ணா சாலையில் உள்ள தியேட்டர்களில் மூன்று படங்கள் வெளியானால், ஒவ்வொரு படத்திலும் வெவ்வேறு கதாநாயகர்கள் நடித்திருப்பார்கள்.

ஆனால், தங்கவேலு அந்த மூன்று படங்களிலும் நடித்திருப்பார். காமெடி நடிகர்களால் கதாநாயகனாகவும் நடிக்க முடியும் என்று நாகேஷ், தொடங்கி கவுண்டமணி, விவேக், சந்தானம், கருணாஸ், என்று பல பேர் இன்று நிரூபித்திருக்கிறார்கள் என்றால் அதற்கு வித்திட்ட பெருமை தங்கவேலுவையே சேரும். சாதாரணமாக பெரிய, பெரிய கதாநாயகர்களே ஜோடி சேர்ந்து நடிப்பதற்கு பயப்பட்ட பானுமதியுடன் ‘ரம்பையின் காதல்’ படத்தில் நாயகனாக நடித்தார் தங்கவேலு. தங்கவேலுவுடன் படங்களில் மட்டுமின்றி, வாழ்க்கையிலும் ஜோடியான எம்.சரோஜாவுடன் தங்கவேலு நடித்த படங்களில் மறக்க முடியாத படம் ஸ்ரீதரின் இயக்கத்தில் உருவான ‘கல்யாணப் பரிசு.’

இன்றளவும், ஏதேனும் பொது நிகழ்ச்சிகள், கோவில் விழாக்கள், திருமண நிகழ்த்தி போன்றவற்றில், மைக் செட் போட்டு, பாடல்கள் ஒளிப்பரிப்பினால், அதனுடன், கல்யாண பரிசு நகைச்சுவை பகுதி மட்டும் தனியாக ஒளிபரப்புவது உண்டு. இன்றைக்கும், அதனை ஆர்வமுடன் கேட்டு, சிரித்து, ரசிக்கும் கூட்டம் உண்டு.

குறிப்பாக, "எழுத்தாளர் பைரவனை நீ நேருல பார்த்திருக்கிய? இப்ப பார், திரும்பி பார், இங்கே பார்" என சவடால் அடிக்கும் காட்சியும், வசனமும், காலங்கள் ஓடினாலும், நிலைத்து நிற்க கூடிய சகா வரம் பெற்றவை. அதிலும் குறிப்பாக, ம்.சரோஜாவின் மாமா ஒருவர் வீட்டுக்கு வர, " மாப்பிள்ளை என்ன செய்து கொண்டிருக்கிறார்?" என கேட்க, ஒரு கணமும் தாமதிக்காமல், "போண்டா தின்னுகிட்டு இருக்கார்" என்று தங்கவேலு கொடுக்கும் பதிலடி, திரை அரங்கம் மட்டுமல்ல, கேட்பவர் அனைவரையும் குபீர் என சிரிக்க வைக்கும்.

நகைச்சுவை ஜோடிகளில் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் மதுரம் ஜோடிக்குப் பிறகு தங்கவேலு எம்.சரோஜா ஜோடி சுமார் 50 படங்களில் இணைந்து நடித்துப் புகழ்பெற்றபின் காதல் திருமணம் செய்துகொண்டனர். கண்களை நன்கு உருட்டி நடிக்கத் தெரிந்த நடிகர்களில் தங்கவேலு டாப்கிளாஸ் நடிகர். எம்.கே.தியாகராஜ பாகவதர் நடித்த "அமரகவி"யில், கலைவாணருடன் இணைந்து நகைச்சுவை விருந்தளித்தார். பாகவதரின் கடைசி மூன்று ஆண்டுகளுக்கு வேண்டிய உதவிகளை செய்து கவனித்து வந்தவர் தங்கவேலு. எம்.ஜி.ஆர், சிவாஜி, ஜெமினி கணேசன் நடித்த பல படங்களில் நடித்தவர். "சக்ரவர்த்தி திருமகள்", "உத்தமபுத்திரன்", "குலேபகாவலி", "அலிபாபாவும் 40 திருடர்களும்", "கற்புக்கரசி", "மங்கையர் திலகம்", "அமரதீபம்", "கல்யாண பரிசு", "எங்கவீட்டு பிள்ளை" உள்பட 800 படங்களுக்கு அதிகமான படங்களில் நகைச்சுவை வேடங்களில் நடித்திருக்கிறார். குறிப்பாக, "கல்யாணப்பரிசு" படத்தில் எதற்கெடுத்தாலும் பொய் சொல்லும் டூப் மாஸ்டராகத் தோன்றி ரசிகர்களை குலுங்கக் குலுங்க சிரிக்க வைத்தார். தமிழ்ப்படங்களில் வந்த 10 சிறந்த நகைச்சுவைக் காட்சிகளைத் தேர்ந்தெடுத்தால், அதில் "கல்யாணப்பரிசு" தங்கவேலுவின் நகைச்சுவை நிச்சயம் இடம்பெறும்.

தங்கவேலு மிகவும் தாராள மனப்பான்மை கொண்டவராகவும் இருந்தார். நவராத்திரியின் போது, ராஜம்பாள் தெருவில் தன் வீட்டிற்கு அருகில் இருந்த பெரிய நிலத்தை அவர் ஒரு திறந்தவெளி அரங்கமாக மாற்றினார். ஒவ்வொரு மாலையும், இசை நிகழ்ச்சிகள், நடனங்கள் மற்றும் பொதுமக்கள் பார்க்கக்கூடிய ஒரு நாடகம் கூட அங்கு நடைபெறும். அப்படி ஒரு சமயம், ஒரு நாடகத்தின் முடிவில், அதில் நடித்த ஒரு பெண் கதாபாத்திரத்தின் நடிப்பைப் பாராட்ட அவர் விரும்பினார். அதற்காக அவர் அந்தப் பெண்ணை மேடைக்கு அழைத்தபோது, உண்மையில் ஒரு சிறுவன்தான் பெண்ணின் வேடத்தில் இருந்தான் என்பதை அறிந்து அவர் அதிர்ச்சியடைந்தார். அந்த இளைஞன் தன் பெயர் நாகேஷ் என்று கூறினான். தங்கவேலு அவனுக்கு வாழ்த்து தெரிவித்தார். நாகேஷ், பிற்காலத்தில் தங்கவேலுவின் முக்கியப் போட்டியாளராக உருவெடுத்தான். சந்திரபாபுவும், ஜெமினி கணேசனும் அவருடைய நெருங்கிய நண்பர்களில் இருவர். அவருடைய நகைச்சுவை பாணியில் அடிதடியோ, அவமதிப்போ இருக்காது. என்.எஸ்.கே மீது அவருக்கு இருந்த நன்றியும் மரியாதையும் அளவற்றது. எல்லா பாத்திரங்களுக்கும் பொருந்தக் கூடியவராக இருந்த ஒரே நகைச்சுவை நடிகர் தங்கவேலு. நேரிலே பேசும்போதும், சரி படங்களில் நடிக்கும்போதும், அறச் சொற்களை பயன்படுத்துவதை அறவே தவிர்த்த கலைஞர்

தங்கவேலு. அதுபோன்று தன் வாழ்நாள் முழுவதும் தனக்கென சில கொள்கைகளை வைத்துக் கொண்டு அதிலிருந்து சிறிதும் விலகாமல் வாழ்க்கை நடத்தியவர் அவர். தமிழ் தவிர பிற மொழிப்படங்கள் எதிலும் நடிப்பதில்லை என்பதை இறுதி மூச்சுவரை கடைப்பிடித்தார் அவர். தங்கவேலு 20 வயதில் மிகவும் ஒல்லியாக இருப்பார். அதனால் தனக்கு வசதியாக இருக்குமென்று கருதி வயதான வேடங்களையே ஏற்று நடித்தார். பணம், திரும்பிப்பார், இல்லற ஜோதி, சுகம் எங்கே உள்படப் பல படங்களில் 60 வயது வேடங்களில் நடித்தார். சந்திரபாபுவைப் போலவே 1950களில் நல்ல மார்க்கெட்டில் இருந்த காலம் தொடங்கி, பின்னால் நாகேஷ் காலம், சோ, தேங்காய் சீனிவாசன், சுருளிராஜன் காலங்களையும் தாண்டிக் கொஞ்சமும் சலிப்பு ஏற்படுத்தாத, பொறி சற்றும் குறையாத நடிப்பு இவருடையது. சந்திரபாபுவைப் போலவே கல்யாண பரிசு' பைரவன் மட்டுமல்ல. 'அறிவாளி' படத்தில் முத்துலட்சுமியுடன் பூரி சுடும் காட்சி, தெய்வப்பிறவியில் "அடியே, நீ என்ன சோப்பு போட்டாலும் வெள்ளையாக மாட்டே", "பார்த்தியா, இதெல்லாம் எடுத்தா அதெல்லாம் வரும்னு சொன்னனேக் கேட்டியா" போன்ற பல வசனங்கள் பிரபலம். வீரக்கனல்' படத்தில் "தப்பித்தவறி அடி ஒங்க மேல பட்டுருச்சின்னு வச்சிக்க்கிங்ங்ங்...க." என்று தங்கவேலு பேசும் வசனம்! "தங்கவேலு சுவாமியாக வந்ததும் நாங்களே! வேலுத்தங்கமாக வந்ததும் நாங்களே! காதலர்ர்ரா...க வந்ததும் நாங்களே!" என 'அடுத்த வீட்டுப் பெண்' படத்தில் பேசுவதும் மறக்க முடியாதது. 'மிஸ்ஸியம்மா'வில் பாட்டு கற்றுக்கொள்ளும் தங்கவேலு. அப்போது ஜெமினி அந்த அறைக்குள் வந்தவுடன் வெட்கப்பட்டுத் தவிக்கிற காட்சி! 'திருடாதே' படத்தில் " பிசாசு ஏன் புரோட்டா கடைக்கு வருது? ஒரு வேளை குஞ்சு பொரிச்சிரிக்குமோ?'' 'நம் நாடு' படத்தில் " ஆஹா ஓஹோ பேஷ் பேஷ்" "கொல பண்ணது கூட லேட்டுங்க. நான் அமுக்குனதுலதான் செத்தான்!'' என்ற வசனம். இவையெல்லாம் அந்தக் கால திரைப்பட நகைச்சுவையில் முத்திரை வசனங்கள்! சந்தானம் தனக்குப் பிடித்த காமெடியன்களாக தங்கவேலுவையும் கவுண்டமணியையும் அடிக்கடி குறிப்பிடுகிறார். சந்தானத்தின் நடிப்பில் கவுண்டமணி தெரியும் அளவுக்கு தங்கவேலு தெரிவதில்லை. இதற்கு முக்கியமான காரணம் தங்கவேலுவின் நாசூக்கான நடிப்புதான். தங்கவேலு எந்தப் படத்திலும் கல்யாணப் பெண் மாப்பிள்ளையைப் பார்த்து "இவ என்ன யாரோடயாவது ஓடிப் போயிட்டாளா? இல்ல இவன்தான் செத்துப் போயிட்டானா?" என்று கேட்கவே மாட்டார். தொந்தரவான வில்லனைக் கூட "அட நீ நல்லாருக்க" என்பார். 'பணம்' படத்தில் நடித்ததற்காகப் படத்தின் தயாரிப்பாளர் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அந்தக் காலத்தில் தங்கவேலுவுக்கு 5,000 ரூபாய் கொடுத்தாராம். இவரும் அந்தப் பணத்தை வீட்டுக்குக் கொண்டுபோய் காட்ட, இவருடைய பெரியப்பா "அடப் பாவி . அன்னமிட்ட வீட்டுல கன்னமிடலாமாடா? கலைவாணர்கிட்ட திருடுனா நீ விளங்கவே மாட்ட"ன்னு திட்டி அடித்து இழுத்துக்கொண்டு என்.எஸ்.கேயிடம் அழைத்துக்கொண்டு போனார். என்.எஸ்.கே "அந்த பணம் தங்கவேலுவுக்கு நான் கொடுத்த சம்பளம்" என்று சொன்னபோதுதான் சமாதானம் ஆனாராம். தங்கவேலுவுக்கு பின்னணிப் பாடல்கள் பலவற்றைப் பாடியவர் எஸ்.சி.கிருஷ்ணன். 'கண்ணே நல்வாக்கு நீ கூறடி, நான் நாலு நாளில் திரும்பிடுவேன். என் செல்வக் களஞ்சியமே! என் சின்னக்கண்ணு மோகனமே!' சீர்காழி சில பாடல்கள் பாடினார். பிரபலமான 'ரம்பையின் காதல்'(1956) படப் பாடல். 'சமரசம் உலாவும் இடமே நம் வாழ்வில் காணா சமரசம் உலாவும் இடமே'சுடுகாட்டில் தங்கவேலு பாடுவதாகக் காட்சி. பி.பி.ஸ்ரீனிவாஸும் பாடியிருக்கிறார். 'அடுத்த வீட்டுப் பெண்' படத்தில் 'கண்ணாலே பேசிப் பேசிக் கொல்லாதே!' ரொம்பப் பிரபலம்.

கலைவாணர் என்.எஸ்.கே. அவர்களின் அன்புக்கும், பாசத்திற்கும் உரியவராக, கலைவாணர் மறைந்த பிறகு, அவர் வகித்த கலை உலகின் இடத்தை நிறைவு செய்து கொண்டிருந்த நகைச்சுவை வேந்தர் தங்கவேலு, 1994 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 ஆம் தேதி தனது 77 வது வயதில் காலமானார்.

Selvan: **Shiva Prakash.M** wedded Selvi: **Ranjana S,** D/o Th.S.Satheesh, (1985-Civil) & Tmt. C.Mahalakshmi, on 07/09/2026, at Rani Mahal, Blue Lagoon Beach Resorts, Injambakkam, Chennai

---

Selvan: **M.S.Bharathi Kumar** wedded Selvi: **A.Indhumathi,** Son of Dr. M. Senthil Kumar (1985-Civil) & Tmt. S.Manjula, on 7th September, 2026, at Mudhalvar Thirumana Mandapam, Guindy, Chennai.

Congratulations

Selvan: ***Advaith Arun*** wedded Selvi: ***Snehalatha,*** Son of Th. B. Arun (1993-Mech) & Tmt.B. Gayathri, on **17th September, 2026,** at **M-Weddings & Convention Centre**, Vanagaram, Chennai.

Announcement

We are having our Annual General Meeting of our CIT Alumni Association, Chennai Chapter, on Sunday 11th October 2026 at 4 p.m at Presidency Club, Egmore, Chennai.All Life Term Members are requested to please attend the AGM without fail.

Thanks

Ashokraj

Secretary CITAACC


Have Diabetes or High BP?
Why wait years for your existing health condition to be covered?
care
HEALTH INSURANCE
Health happens. Care is there.
Instant Cover*
With CARE Supreme, eligible customers can get the applicable waiting period waived for Diabetes, Hypertension, Hyperlipidemia & Asthma.
Your protection can grow with you
Start with ₹10 lakh today. Build a larger protection cushion for tomorrow with Cumulative Bonus + NCB Super.
₹10 Lakh → ₹70 Lakh
Up to 7X protection in 5 years
₹10L
₹25L
₹50L
₹60L
₹70L
Year 1
Year 2
Year 3
Year 4
Year 5
Base Cover
With Cumulative Bonus
With Cumulative Bonus + NCB Super
Growing further
A stronger you for tomorrow
Helping you keep pace with rising medical costs.
Unlimited Automatic Recharge
Your cover can replenish again when you need it for eligible hospitalisation.
22,100+ cashless healthcare providers
Access cashless treatment across 1,400+ cities.
Lifelong Renewability
Protection that stays with you as you grow older.
CARE Supreme™
Comprehensive today. Stronger tomorrow.
Secure today .. Grow tomorrow
Anand Kumar
+91 85084 81835
anandtokyo@gmail.com
Live healthier. Live happier.
Instant Cover is an optional benefit available at additional premium. Eligibility, underwriting, waiting periods, exclusions and other terms & conditions apply.
Cumulative Bonus, NCB Super and maximum accumulated cover are subject to applicable product/policy terms. Hospital network figures are as stated by CARE and may change. Please refer to the policy wording for complete details.

Good Guidance Brings A Brighter Tomorrow
ASTRO MURALI
KP STELLAR ASTROLOGY
ANALYTICAL • PRECISE • TRUSTED
PEOPLE
PLANETS
POSSIBILITIES
Ancient Wisdom
for a Brighter Tomorrow
Practical guidance through KP Stellar Astrology to help you make informed decisions in life.
Marriage & Compatibility
Stronger Relationships
Career & Business Growth
Right Opportunities
Childbirth Timing
Auspicious Guidance
Foreign Settlement
Insights for a Global Future
Your Questions Matter
LET ASTROLOGY BRING CLARITY
7904666907
KP ASTROLOGY
Vedic Wisdom
A Brighter Tomorrow
consult@astromurali.com
www.astromurali.com
Follow for Astrology Insights
BETTER DECISIONS ✦ BRIGHTER TOMORROW

Homage to SWAMINATHAN Sir by 1977 Batch

A moment of celebration
Of a soul,
whose mentorship touched adolescents
Whose advice, guidance, solutions
unburdened parents, awakened
Young minds
Perched in his airy office, naturally lit
The open, breezy windows
welcoming naive, innocent students
from afar, stern and serious,
You seem
Reach you
Lo & behold, you have the
answers to the most daunting challenges
from day one to graduation
You were the one-stop solution
from delayed payments to scholarships
from attendance to hall tickets
never once were we chastised
always guided to succeed
From the batch of '77
Salutations Dear Sir
You touched lives
You made the difference
Decades on, we have met administrators
We have manoeuvred admin politics
We confess,
You stand tall, figuratively & truly
We never met a truer Soul than thee
Citians, stand as one
in prayers
for the peace of the departed soul
for the family to have the strength
to bear the irreplaceable loss,
Reverentially, with prayers,
The Batch of '77,
Dear Sir.



Janardhan Venugopal,
1977 ECE

A TRIBUTE TO GOOD SAMARITAN

Mr.A.Swaminathan

{Former PA to Principal - CIT}

1941 ~ 2026

K.N.K.Sundar,
1985 - Mech

Mr. Swaminathan, fondly called by us as OS [He was then the Office Superintendent during our time 81~85] breathed his last on 20.09.2026 in Chennai at the age of 85. His last rites took place at Coimbatore; batchmate Mr Devaraju and self, paid last respects to him on behalf of our 1981-85 batch @ CIT.

OS was such a kind soul with an amazing memory; we were in close touch even after 41 years of our course completion! He never failed to greet us on our anniversaries till 2025! He graced almost all our family weddings till 2025.

Upon our courtesy visit to his home, though frail, his active memory immediately recognized us by name, which was very surprising.

During his tenure at CIT he was a confidante of the management, a trusted aide of the then Principal, Mr.Gurusamy & staff, a guide to all the students.

He bridged the gap between students and management of the College ably, so that any issue that could have snowballed into a controversy was resolved amicably. Thanks to his generosity, even the notorious would be pardoned and brought back to rail, by him. (I for one, a classic example).

After serving CIT, he served as the Director of Karthik Educational Consultancy Services, President of Sowdeswari Educational Foundation, VP of Boys HSS Ondipudur, Patron of District Human Rights NGO, Advisor for Rathinam College & Advisor to Vel Tech group of Institutions.

It was indeed a sad and grim picture in memory, his posture crest-fallen, sitting close to the mortal remains of Prof. M.Gurusamy, then Principal, CIT and mourning, when we were paying our respects to the Past Principal. A true friend, indeed.

May his soul rest in peace… Om Shanthi!

அஞ்சலி

மு.இராமனாதன் (1981)

நன்றி: Siruvani Paradise- CIT Alumni Magazine, May 2022

இது நான்காண்டுகளுக்கு முன்பு எழுதியது. எப்பேர்ப்பட்ட மனிதர்! போய் வாருங்கள், சார்!

எங்கள் காலத்தில் சாமிநாதன் சார் அலுவலகக் கண்காணிப்பாளராக இருந்தார். பின்னாளில் முதல்வரின் தனி உதவியாளராக உயர்ந்தார். மாணவர்களின் தேர்வு விண்ணப்பம், உதவித்தொகை விண்ணப்பம், அட்டவணைகள், சான்றிதழ்கள் என சகலமானதும் அவர் மேசையேறித்தான் செல்லவேண்டும்.

அன்றுதான் பணிக்குச் சேர்ந்த எழுத்தரைப் போல் ஒவ்வொரு காகிதத்திலும் கவனம் செலுத்துவார். அதே வேளையில் அவர் எதையும் இயந்திரத்தனமாகச் செய்தவர் அல்லர். மாணவர்கள் மீது எல்லையற்ற கரிசனம் மிக்கவர். என்னுடைய அனுபவமொன்று எடுத்துக்காட்டாக அமையும்.

அது முதலாமாண்டு. வளாகமும் வகுப்பறைகளும் பிடிபடாத ஆரம்பக் காலம். அந்நாளில் எஸ்.எஸ்.எல்.சிக்கு (11ஆம் வகுப்பு) மொத்தம் 600 மதிப்பெண்கள், 500க்கு மேல் எடுத்தவர்களுக்கு புலமைப் பரிசல் கிடைக்கும். அது CIT வந்த பிறகுதான் எனக்குத் தெரிந்தது.

500ஐ நான் சில தப்படிகளில் தவறவிட்டிருந்தேன். அப்போது குடும்பத்தின் நிதி நிலைமை சிலாக்கியமாக இல்லை. சங்கடமாக இருந்தது. அந்த வேளையில்தான் கடன் பரிசில் ஒன்று இருப்பதை அறிந்தேன். வட்டி இல்லாக் கடன். படித்து முடித்து வேலை கிடைத்த பிற்பாடு சுலபத் தவணைகளில் கட்டலாம். நான் விண்ணப்பித்தேன். அது ஏற்கப்பட்டது. ஆறேழு சான்றிதழ்கள் கேட்டார்கள். எல்லாம் நான் ஏற்பாடு செய்யக்கூடியதாக இருந்தது ஒன்றைத் தவிர. அது வருமானச் சான்றிதழ். குடும்பத்தின் மாத வருமானம் ரூ.300ஐ மிகலாகாது. வட்டாட்சியர் சான்றளிக்க வேண்டும்.

அது செல்பேசிகள் இல்லாத காலம். பெற்றோர் ஸ்ரீவில்லிபுத்தூரில் வசித்தார்கள். அந்தச் சிறு நகரத்தில் நூறு தொலைபேசிகள் இருந்திருக்கலாம். விரல்களால் எண்களைச் சுழற்ற வேண்டும். ஆனால் அது உள்ளூர் பயன்பாட்டிற்கானது. வெளியூர் உரையாடல்களுக்கு அஞ்சல் நிலையம் போய்க் காத்திருக்க வேண்டும். ட்ரங்கால் என்று பெயர். அதெல்லாம் தலை போகிற அவசரத்திற்கு மட்டும்தான். மற்றபடி நீல நிற உள்நாட்டு அஞ்சல்கள்தான். பரிமாற்றம் விரைவாக இருக்கும். ஒவ்வொரு மாணவனின் மேசை இழுப்பறையிலும் எழுதப்படாத நீல அஞ்சல்கள் சில இருக்கும். விடுதி அங்காடியிலேயே வாங்கிக்கொள்ளலாம். அஞ்சல் நிலையத்தின் விலைதான். காசு கொடுக்க வேண்டாம். அச்சடித்த சீட்டு கொடுக்க

வேண்டும். மெஸ் பில்லில் சேர்த்துக்கொள்வார்கள்.

நான் என் அப்பாவுக்கு ஒரு நீலக் கடிதம் எழுதினேன். அப்போது அப்பா ஓர் உர விற்பனைக் கடையில் மேலாளராக இருந்தார். அவருக்கு உதவியாக ஒரேயொரு கீழாளரும் இருந்தார். அப்பாவிடமிருந்து இரண்டு நாட்களில் பதில் வந்தது. 'எனது மாத வருமானம் ரூ.500. ஆகவே இந்தப் பரிசிலைப் பெற நமக்குத் தகுதியில்லை' என்று அதில் கண்டிருந்தது. கூடவே, 'நீ படிப்பில் கவனம் செலுத்து, குடும்பத்தைப் பற்றிக் கவலைப்படாதே' என்கிற அறிவுரையும் இருந்தது.

தாழியை உடைக்கிற அப்பாவின் மீது எனக்குக் கடும் கோபம் வந்தது. மீண்டும் ஒரு கடிதம் எழுதினேன். இந்த முறை அம்மாவுக்கு. 'இது என் கவுரவப் பிரச்சினை. இப்போது கல்லூரி அலுவலகத்திற்குப் போய்ச் சான்றிதழ் தரமுடியாது என்று சொன்னால் என்னைப் பொரித்து விடுவார்கள்.

அப்பா எந்த அரசு வேலையிலும் இல்லை. படிப்புக்கு என்பதால் சான்றிதழ் கிடைக்கும் என்று இங்கே எல்லோரும் சொல்கிறார்கள்.

வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் போய் வாங்கி அனுப்பச் சொல்லவும்.' இப்படி விலாவாரியாக எழுதினேன். இதற்கும் இரண்டு நாளில் பதில் வந்தது. அம்மா எழுதியிருந்தார்.

'இந்தப் பரிசில் நமக்கு வேண்டாம். ஒரு பொய்ச் சான்றிதழின் மேல் உனது படிப்பு நிற்க வேண்டாம் என்று அப்பா நினைக்கிறார்கள். செலவை எங்களால் சமாளிக்க முடியும்.' இதுதான் பதில். நான் காண்டீபம் இழந்த அர்ஜுனனைப் போல் ஆனேன்.

கல்லூரி அலுவலகத்தில் பரிசில் துறை எழுத்தரிடம் போனேன். நடந்ததைச் சொன்னேன். நான் எதிர்பார்த்தது நடந்தது.

'போதிய சான்றுகள் இல்லாமல் ஏன் எங்கள் கழுத்தை அறுக்கிறீர்கள்?' என்று சினந்தார் எழுத்தர். அவர் குரல் உயர்ந்து கொண்டே வந்தது. அது அலுவலகத்தின் மறு முனையில் இருந்த சாமிநாதன் சாரின் செவிகளை எட்டியது. சார் எங்கள் இருவரையும் அழைத்தார். அவரவர் தரப்பைச் சொன்னோம். சார் அமைதியாகக் கேட்டுக் கொண்டார். எழுத்தரிடம் சொன்னார்:

'பரவாயில்லை, கோபப்படாதீர்கள், இந்த மாணவனின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது என்று எழுதிவிட்டு, மற்ற விண்ணப்பங்களை உடனடியாக இயக்குநர் அலுவலகத்துக்கு அனுப்புங்கள்' என்றார். அடுத்து என்னை நோக்கித் திரும்பினார். கனிவு ததும்பப் பார்த்தார். என் வாழ்நாளில் நான் மறக்கமுடியாத அந்த வாக்கியத்தைச் சொன்னார்: I appreciate you, and I appreciate your father.

எனக்குச் சில கதவுகள் திறந்தன. அதுகாறும் அப்பாவின் மீது எனக்குக் கோபமும் வருத்தமும்தான் இருந்தது.

அப்பா சாதாரண மனிதர்தான். ஆள் கூட்டத்தில் தொலைந்து போகக்கூடியவர். ஆனால் அவருக்குச் சில விழுமியங்கள் இருந்தன.

அது எனக்குப் புலப்படவில்லை. ஆனால் அதைக் கண்டுகொண்டு, அதற்கு மதிப்பளித்து, எனக்கும் காட்டிக் கொடுத்தவர் சாமிநாதன் சார்.

CIT எங்களுக்கு வழங்கியது பொறியியல் கல்வி மட்டுமில்லை, வாழ்வியல் சார்ந்த மதிப்பீடுகளும்தான்.

"ஆற்றலாற்றுப்படை" புத்தக வெளியீடு ஒரு பார்வை



B. Murugavel
1983-Mech.

2026 செப்டம்பர் 27ஆம் தேதி சென்னை, கோட்டூர்புரம் , அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடந்த இனிய மாலை திரு. பால பன்னீர்செல்வம் (1983-Chem), அவர்களின் புத்தகத்தின் வெளியீட்டு விழா மிக சிறப்பாக நடைபெற்றது.

அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கம், வெகு விரைவாகவே CIT Alumni நண்பர்கள், CPCL-ன் முன்னாள் மற்றும் தற்போதைய பணியாளர்கள், ஓய்வுபெற்ற சக ஊழியர்கள், நண்பர்கள், நலம் விரும்பிகள் என 250க்கும் மேற்பட்ட பார்வையாளர்களால் நிரம்பியது.

விஞ்ஞானியும் எழுத்தாளருமான திரு.வெங்கடேஸ்வரன் சிறப்புரையாற்றி நூலை வெளியிட. . நூலின் முதல் பிரதியை திரு. எஸ். ராமலிங்கம், முன்னாள் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், CPCL அவர்கள் பெற்றுக்கொண்டார்

கற்றறிந்தோர் பலர் வாழ்த்துரை வழங்க, தன்னுடைய ஏற்புரையில், தான் கடந்து வந்த பாதையில், உடன் பயணித்தோர், உதவி புரிந்தோர், நட்பு பாராட்டியவர்கள், ஊக்கம் தெரிவித்தவர்கள் ஒருவர் விடாது, அனைவர்க்கும் நன்றி பகர்ந்தார் பன்னீர்செல்வம் அவர்கள். விழா இனிதே நிறைவு பெற்றது.

சிந்தனையும், ஆவலையும், ஒருங்கே தூண்டும் தலைப்பும், புத்தகத்தின் பொருளும் மெச்ச தகுந்தது மட்டுமல்ல, பகிரவேண்டியதுமாகும்.

காத்திருப்பீர் வரும் இதழ் வரும் வரையில்...

#LeanOnUs

GERI CARE
ELDERCARE BY GERIATRICIANS

Continuum Of Care For Today. *Confident Ageing* For Tomorrow.

From preventive care to recovery, rehabilitation and support at home, our care is designed around the changing needs of our elders.

360° CONTINUUM OF CARE

When Cancer Meets Ageing, Care Must Go Beyond Cancer.

GERIATRIC ONCOLOGY CENTRE

Where every cancer care plan is co-created by geriatricians and oncologists.

Geri Care, Adambakkam

HOSPITALS & CLINICS T.NAGAR | ADAMBAKKAM | ADYAR

SKILLED NURSING FACILITIES VELACHERY | ADYAR

ANNA NAGAR | THORAIPAKKAM | RA PURAM | MOGAPPAIR

INDIA'S 1ST ELDER-CARE SERVICES BY GERIATRICIANS

99 444 59 444

www.gericare.in | enquiry@gericare.in

Enquire now